நாள் : 02.12.2024

காலை 8 மணி நிலவரம்

செய்தி வெளியிடு

பெருநகர சென்னை மாநகராட்சி

# வடகிழக்குப் பருவமழை நடவடிக்கைகள் விவரம்

## <u>பெருநகர சென்னை மாநகராட்சி</u>

- ❖ பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் கடந்த 01.10.2024 காலை 8.30 மணி முதல் 02.12.2024 காலை 8.30 மணி வரை பதிவான மழையின் அளவு – 798.95 மி.மீ.
- ❖ 01.12.2024 காலை 8.30 மணி முதல் இன்று 02.12.2024 காலை 8.00 மணி வரை பெய்த மழையின் அளவு சராசரியாக 10.85 மி.மீ.
- ❖ அதிகபட்சமாக அயப்பாக்கத்தில் 26.70 மி.மீ. மழை அளவும், குறைந்த பட்சமாக உத்தண்டியில் 0.30 மி.மீ. மழை அளவும் பதிவாகியுள்ளது.
- ❖ 30.11.2024 அன்று காலை, மதியம், இரவு என மொத்தம் 6,35,300 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. நேற்று (01.12.2024) காலை, மதியம், இரவு என மொத்தம் 5,30,150 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. இன்று (02.12.2024) காலை உணவு 24,000 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.
- ❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி சென்னையில் உள்ள 386 அம்மா உணவகங்களிலும் 30.11.2024 அன்று இலவசமாக உணவு வழங்கப்பட்டது. இவற்றின் மூலம் 1,07,047 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

- மழைக்காலத்தினை முன்னிட்டு, 15.10.2024 முதல் 01.12.2024 வரை சென்னையில் மட்டும் இதுவரை 2,839 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது. இதன் மூலம் 1,53,120 நபர்கள் பயனடைந்துள்ளனர். இன்று (0.12.2024) 192 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெறுகிறது.
- தற்போது பெய்த மழையின் காரணமாக 13 இடங்களில் இருந்த நீர்த்தேக்கத்தில் 6 இடங்களில் மழைநீர் வெளியேற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 7 இடங்களில் துரிதமாக மழை நீர் அகற்றும் பணி போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில், கணேசபுரம் சுரங்கப்பாதையில் இரயில்வே மேம்பாலப் பணி காரணமாக தற்காலிகமாக போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சுரங்கப்பாதைகளில் போக்குவரத்து சீராக உள்ளது.
- பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 361 இடங்களில் நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.
- நிவாரண மையங்களில் தற்போது எவரும் இல்லை
- நிவாரண மையங்களில் உணவு, சுகாதார வசதி, குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளன.
- பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க 101 மைய சமையல் கூடங்கள் தயார் நிலையில் உள்ளன.
- மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட 1,686 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன.

- தற்போது 100Hp மோட்டார் பம்புகள் 137 எண்ணிக்கையில் தயார் நிலையில் உள்ளன.
- தற்போது தயார் நிலையில் டிராக்டர் மேல் 484 மோட்டார் பம்புகள் பொருத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளன.
- பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் விழும் மரங்களை அகற்றுவதற்காக ஹைட்ராலிக் மர அறுவை இயந்திரங்கள் 9 , ஹைட்ராலிக் ஏணி 2 , மர அறுவை இயந்திரங்கள் 262 , டெலஸ்கோபிக் மர அறுவை இயந்திரங்கள் 216 என மொத்தம் 489 இயந்திரங்கள் தயார் நிலையில் உள்ளன.
- தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை மீட்டு நிவாரண மையங்களில் தங்க வைப்பதற்காக 103 படகுகள் தயார்நிலையில் உள்ளது. இதில் 36 படகுகள் மாநகராட்சிக்கு சொந்தமாக வாங்கி தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.
- 15.10.2024 முதல் 02.12.2024 வரை பொதுமக்களிடமிருந்து மழைத் தொடர்பாக 1913 என்ற உதவி எண்ணிற்கு 52,333 புகார்கள் பெறப்பட்டு, 40,043 புகார்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 12,290 புகார்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட 22 ஆயிரம் பேர் மழை வெள்ள மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.
- மழை வெள்ள களப்பணிகளில் ஈடுபட இதுவரை 18,500 தன்னார்வலர்கள் பதிவு செய்துள்ளனர்.

**<u>சென்னை குடிநீர் வாரியம்</u>**

- 299 தூர்வாரும் இயந்திரங்கள்.
- 73 அதிவேக கழிவு நீர் உறிஞ்சும் வாகனங்கள்.
- 225 ஜெட்ராடிங் வாகனங்கள்.
- பிற மாவட்டங்களில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ள 45 கழிவுநீர் ஊர்திகள் என மொத்தம் 642 கழிவுநீர் அகற்றும் இயந்திரங்கள் கழிவுநீர் அகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.
- 15 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் பணிகளை 2149 களப்பணியாளர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி